06.02.2023
STC. 145/2023

புகார்தாரர் –குணசேகரன்   , த/பெ. கந்தசாமி

புகார்தாரர் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டார்.

எதிரி எனக்கு நன்கு அறிமுகமானவர்., அவரது குடும்ப செலவு மற்றும் சில்லறை கடன்களை தீர்க்கவேண்டி கடனாக ரூ.55,000/– பணத்தை 5.7.22 ம் தேதி எனது வீட்டில் வைத்து பெற்றுக்கொண்டார். மேற்படி தொகைக்கு ஆதரவாக எதிரி கணக்கு வைத்துள்ள திண்டுக்கல் ஆட்சித்தலைவர் அலுவலக இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளையின் காசோலை ஒன்றை 5.11.22 என பின்தேதியிட்டு கொடுத்தார். காசோலை எண்.484242 ஆகும்., நான் மேற்படி காசோலையை 5.11.22 ம் தேதி திண்டுக்கல் நேருஜி நகர் இந்தியன் வங்கியில் வசூலுக்கு செலுத்தினேன். காசோலை 7.11.22 ம் தேதி மதிப்பு மறுக்கப்பட்டு திருப்பப்பட்டது. மேற்படி விவரத்தை கூறி 6.12.22 ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். அதை 10.12.22 ம் தேதி எதிரி பெற்றுக்கொண்டார். எந்தவொரு பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை. நாளது தேதி வரை எதிரி பணத்தை திருப்பிதரவில்லை. எனவே எதிரி அவரது வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்பதை தெரிந்துகொண்டே காசோலையை கொடுத்து மோசடி செய்து என்னை ஏமாற்றியுள்ளார். மேற்படி எதிரி மீது நடவடிக்கை எடுத்து காசோலைக்கான தொகை பெற்றுத்தருமாறு பிரார்த்திக்கொள்கிறேன்.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

V PRIYA
Digitally signed by V PRIYA
Date: 2023.02.08 10:44:57 +0530

Judicial Magistrate No.I
Dindigul.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, DINDIGUL

| | | |
|---|---|---|
| Case No. | : | S.T.C. 145 /2023 |
| Deposition of witness for | : | PW : 1<br>DW : |
| Name | : | குணசேகரன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.02.2023

நான் இவ்வழக்கின் புகார்தாரர். எதிரியின் மீது காசோலை மோசடி குறித்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். புகார்தாரர் தரப்பில் 1 வது சாட்சியாக சாட்சியம் அளிக்க எனது முதல் விசாரணை வாக்குமூலத்தினை தாக்கல் செய்கிறேன்.

1) 5.11.22 ம் தேதியிட்ட முறையீடுதாரருக்கு எதிரி கொடுத்த காசோலை (காசோலை எண். 484242 ), முறையீடுதாரருக்கு எதிரி கொடுத்த காசோலை அசல் ம.த.சா.ஆ.1 ஆகும்,

2) 5.11.22 ம் தேதியிட்ட காசோலையை வங்கியில் செலுத்தியதற்கான வங்கி சலான் அசல் ம.த.சா.ஆ.2 ஆகும்,

3) 7.11.22 ம் தேதியிட்ட காசோலை என மதிப்பு மறுக்கப்பட்டு திருப்பப்பட்ட ரிட்டன் மெமோ அசல் ம.த.சா.ஆ.3 ஆகும் ,

4) 6.12.21 ம் தேதியிட்ட முறையீடுதாரர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் ம.த.சா.ஆ.4 ஆகும்,

V PRIYA

Digitally signed by V PRIYA
Date: 2023.02.08 10:45:04 +0530

5). 6.12.22 ம் தேதி அறிவிப்பு அனுப்பட்டதற்கான அஞ்சல் ரசீது அசல் மதசாஆ.5

6). 10.12.22 ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை அசல் மதசாஆ.6 ஆகும்

எனவே மனு படி தீர்ப்பளிக்க வேண்டுகிறேன்.

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

V PRIYA

Digitally signed by V PRIYA
Date: 2023.02.08 10:45:09 +0530

Judicial Magistrate No.I
Dindigul.